இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 232 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 20 – செவ்வாய்க்கிழமை 02 ஏப்ரல் 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 232 : Thiruvalluvar Year - 2055 - Panguni 20 - Tuesday 02 April 2024 - Madurai 16 Pages ₹ 5.00

## பத்தாண்டுகளாக கும்பகர்ணத் தூக்கத்தில் இருந்துவிட்டு - இப்போது

# பிரதமர் மோடிக்கு மீனவர் மீது திடீர் பாசம் ஏன்?



நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள "தலைமைக் கழக WAR ROOM அலுவலகத்திற்கு" தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள், நேற்று (01.04.2024), காலை நேரில் சென்று, மாநிலம் முழுவதும் நடைபெற்று வரும் தேர்தல் பணிகள் குறித்து ஆய்வு செய்தார். அதுபோது, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தி.மு.க. சட்டத்துறைச் செயலாளரும் – மூத்த வழக்கறிஞருமான என்.ஆர்.இளங்கோ, எம்.பி., துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா மற்றும் தலைமைக் கழக தேர்தல் பணி வழக்கறிஞர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, ஏப். 2 - "பத்தாண்டுகளாக கும்பகர்ணத் தூக்கத்தில் இருந்துவிட்டு இப்போது பிரதமர் மோடிக்கு மீனவர் மீது திடீர் பாசம் ஏன்?" என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.**

தேர்தலுக்காக கச்சத்தீவு பிரச்சினையில் திடீர் மீனவர் பாச நாடகத்தை அரங்கேற்றும் பிரதமர் மோடிக்கு தமிழ்நாட்டு மக்கள் சார்பில் 3 கேள்விகளை எழுப்பி, அதற்கு திசை திருப்பங்களில் ஈடுபடாமல் விடையளியுங்கள் என்றும் கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

கச்சத்தீவு தொடர்பாக, தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்ற தகவலை பெற்று, அதன் அடிப்படையில் அப்போதைய காங்கிரஸ் மீது கடுமையாக குற்றம் சாட்டி தனது தேர்தல் பிரச்சாரத்தில் பேசியுள்ளார். அத்துடன் அப்போது காங்கிரஸின் இந்த நடவடிக்கைக்கு தி.மு.க.வும் உடன்பட்டதாக குற்றம் சாட்டி பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

அண்ணாமலை ஆர்.டி.ஐ.ன் கீழ் பெற்ற தகவலை மையமாக வைத்துக் கொண்டு, உண்மை நிலவரம் பற்றி ஆராயாமல் பிரதமர் மோடியும் தனது 'எக்ஸ்' தளத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக சில கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

அவரைத் தொடர்ந்து ஒன்றிய அமைச்சர்கள் அமித்ஷா, நிர்மலா சீத்தாராமன், பா.ஜ.க. தலைவர் நட்டா உள்ளிட்ட பா.ஜ.க.வின் முன்னணித் தலைவர்களும் இது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். அதில் தி.மு.க.வையும் தேவையின்றி பழி சுமத்தி உள்ளனர்.

கச்சத்தீவு இலங்கைக்கே சொந்தம் என்று அறிவித்த கால கட்டத்தில் 'பதைத்தோம்' - 'துடித்தோம்' என்று குறிப்பிட்டு, உண்மைகளை விளக்கி தலைவர் கலைஞர் அவர்கள் அறிக்கை வெளியிட்டும் விளக்கிப் பேசியும் உள்ளார்.

அது மட்டுமின்றி காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார். நல்லெண்ணத்தின் அடிப்படையில் இவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது பற்றி விளக்கி, பா.ஜ.க. ஆட்சியில் வங்கதேச நாட்டிற்கு 111 நிலப்பகுதியில் வழங்கப்பட்டிருப்பதை குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க. ஆட்சியில், இது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டது போன்றதொரு தோற்றத்தை தேர்தல் பிரச்சாரத்தின் போது உண்மைக்கு மாறாக பா.ஜ.க.வினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த 10 ஆண்டுகாலமாக ஆட்சியில் இருந்த பிரதமர் மோடி, கச்சத்தீவு பிரச்சினை பற்றியும் அதற்கு தீர்வு காண வேண்டியது பற்றியும் எந்வொரு நடவடிக்கையும் எடுக்காமல், திடீரென்று மீனவர்கள் மீது பாசத்தை பொழிவது குறித்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பக்கத்தில், அவருக்கு 3 கேள்விகளைக் கேட்டு, திசை திருப்பங்களில் ஈடுபடாமல் 'விடையளியுங்கள் பிரதமர் அவர்களே!' என்று கணை தொடுத்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**"பத்தாண்டுகளாகக் கும்பகர்ணத் தூக்கத்தில் இருந்துவிட்டு, தேர்தலுக்காகத் திடீர் மீனவர் பாச நாடகத்தை அரங்கேற்றுபவர்களிடம் தமிழ்நாட்டு மக்கள் கேட்கும் கேள்வி மூன்று தான்.**

**1. தமிழ்நாடு ஒரு ரூபாய் வரியாகத் தந்தால், ஒன்றிய அரசு 29 பைசா மட்டுமே திருப்பித் தருவது ஏன்?**

**2. இரண்டு இயற்கைப் பேரிடர்களை அடுத்தடுத்து எதிர்கொண்ட போதும், தமிழ்நாட்டுக்கு ஒரு ரூபாய் கூட வெள்ள நிவாரணம் வழங்காதது ஏன்?**

**3. பத்தாண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட சிறப்புத் திட்டம் என ஒன்றாவது உண்டா?**

**திசைதிருப்பல்களில் ஈடுபடாமல், இதற்கெல்லாம் விடையளியுங்கள் பிரதமர் அவர்களே...**

**பதில் சொல்லுங்க மோடி"**

இவ்வாறு முதல்வரும் தி.மு. கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## மோடி ஆட்சியில் வங்க தேசத்துக்கு

# இந்திய நிலப்பகுதிகள் வழங்கப்பட்டது எப்படி?

## காங்கிரஸ் கட்சித் தலைவர் கார்கே கேள்வி!



*புதுடெல்லி, ஏப். 2 - கச்சத்தீவு விவகாரம் தொடர்பான ஆவணங்களை தமிழ்நாடு பா.ஜ. தலைவர் அண்ணாமலை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெற்ற விவரங்கள் வெளியாகி உள்ளன. இதை மேற்கோள்காட்டி பிரதமர் மோடி டிவிட்டரில் பதிவிடுகையில், 1974ல் கச்சத்தீவு இந்திரா காந்தியால் இலங்கைக்கு தரப்பட்டது என்று கூறியிருந்தார்.*

*இதற்கு பதிலளித்து, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே டிவிட்டரில் கூறியிருப்பதாவது:-*

*கடந்த 2015 வங்கதேசத்தின் மோடி அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி இந்தியாவின் 111 பகுதிகள் அந்த நாட்டுக்கு வழங்கப்பட்டன. வங்கதேசத்துடனான ஒப்பந்தம் இருநாட்டு மக்களின் இதயங்களை இணைக்கும் என்று அப்போது மோடி கூறினார். இதேபோன்ற நட்பு ரீதியான ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் கடந்த 1974ல் இலங்கைக்கு கச்சத்தீவு தரப்பட்டது.*

*ஆனால், கச்சத்தீவு இலங்கைக்கு தரப்பட்டதை மட்டும் மோடி விமர்சிப்பது ஏன்?*

*இலங்கையுடன் போரிட்டுதான் கச்சத்தீவை மீட்க முடியும் என்று உங்கள் அரசின் அட்டர்னி ஜெனரல் முகுல் ரோதஜி கடந்த 2014ல் உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தார். கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் கச்சத்தீவை மீட்க நீங்கள் என்ன செய்தீர்கள்? இது வரை இந்த பிரச்சினையில் உறங்கிக் கொண்டிருந்தீர்களா? மக்களவை தேர்தலில் தோல்வி ஏற்படும் என்ற பயம் காரணமாக இப்போது பிரதமர் மோடி பிரச்சினை கிளப்புகிறார்.*

*கிழக்கு லடாக்கில் கல்வான் பள்ளத்தாக்கில் நம்முடைய ராணுவ வீரர்கள் 20 பேரை சீன ராணுவம் கொன்று குவித்தது. ஆனால், சீனா இந்தியாவின் நிலப்பரப்பை ஆக்கிரமிக்கவில்லை என்று எதிரி நாட்டுக்கு மோடி நற்சான்றிதழ் கொடுத்தது ஏன்? காந்தி, நேரு, படேல், இந்திரா காந்தி, ராஜிவ் காந்தி போன்ற காங்கிரஸ் தலைவர்கள் நாட்டுக்காக தங்கள் உயிரை கொடுத்தவர்கள். எதற்கெடுத்தாலும் காங்கிரசை குறை கூறுவதை நிறுத்துங்கள். உங்கள் தவறான நடவடிக்கையில் இந்தியா பாதிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.*

*இவ்வாறு கார்கே கூறியுள்ளார்.*

## இரு மாநில முதல்வர்களை சிறையில் தள்ளி

# பிரதமர் மோடி தில்லு முல்லு செய்து தேர்தலில் வெற்றிபெற சதி!

## டெல்லியில் நடைபெற்ற 'இந்தியா' கூட்டணி பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி குற்றச்சாட்டு!



புதுடெல்லி, ஏப். 2 – 'டெல்லி மற்றும் ஜார்க்கண்ட் மாநில முதல்வர்களை சிறையில் தள்ளி, 4 கோடீஸ்வர தொழிலதிபர்களுடன் இணைந்து மேட்ச்பிக்சிங் சதி மூலம் மக்களவை தேர்தலில் பிரதமர் மோடி ஜெயிக்கப் பார்க்கிறார்' என டெல்லியில் நடந்த 'இந்தியா' கூட்டணியின் கண்டன பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி உரையாற்றினார்.

மக்களவை தேர்தலுக்கு முன்பாக எதிர்க்கட்சிகளை மிரட்டும் வகையில் ஜார்க்கண்ட் முன்னாள் முதல்வர் ஹேமந்த் சோரன் மற்றும் டெல்லி முதல்வர் கெஜ்ரிவாலை ஒன்றிய அரசின் விசாரணை அமைப்புகள் கைது செய்திருப்பதற்கு கண்டனம் தெரிவித்து, 'ஜனநாயகத்தை காப்பாற்றுங்கள்' என்கிற கண்டன ஆர்பாட்டம் இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் டெல்லி ராம்லீலா மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பேசியதாவது:–

கிரிக்கெட்டில் நடுவரையும், கேப்டனையும் படிய வைக்க முடியாத சமயத்தில், வீரர்களை விலைக்கு வாங்கி, போட்டியில் வெற்றி பெறுவதை, மேட்ச்பிக்சிங் என்பார்கள். இப்போது மக்களவை தேர்தல் நடக்கப் போகிறது. இதில் நடுவர்களை தேர்வு செய்தது யார்? போட்டி தொடங்குவதற்கு முன் 2 வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இப்படி, பிரதமர் மோடி மேட்ச்பிக்சிங் செய்து இத்தேர்தலில் வெற்றி பெற முயற்சிக்கிறார். மக்களவை தேர்தலில் பா.ஜ. கூட்டணி 400க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும் என அவர்கள் முழங்குகிறார்கள்.

**பா.ஜ.க.வால் 180 இடங்களைக் கூட தாண்ட முடியாது!**

ஆனால், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம், மேட்ச்பிக்சிங், எதிர்க்கட்சி தலைவர்கள் மீதான அழுத்தம், ஊடகங்களை விலைக்கு வாங்குதல் என இவையெல்லாம் இல்லாமல் இருந்தால் பாஜ கூட்டணியால் 180 இடங்களைக் கூட தாண்ட முடியாது. காங்கிரசின் வங்கி கணக்குகள் அனைத்தையும் அவர்கள் முடக்கி உள்ளனர். 2 மாநில முதல்வர்களை கைது செய்துள்ளனர். இது என்ன மாதிரியான தேர்தல்? சிபிஐ, அமலாக்கத்துறை, போலீஸ் மூலம் மிரட்டி நாட்டை ஆளலாம் என நினைக்கிறார்கள்.

நீங்கள் ஊடகங்களை விலைக்கு வாங்கி அடக்கலாம். ஆனால் இந்தியாவின் குரலை அடக்க முடியாது. இந்த மக்களின் குரலை இந்த உலகில் எந்த சக்தியாலும் அடக்க முடியாது.

**'இந்தியா'வின் குரலை அடக்க முடியாது!**

'நாங்கள் 400க்கும் மேற்பட்ட இடங்களில் வென்றவுடன் அரசியலமைப்பை மாற்றுவோம்' என பா.ஜ. எம்.பி. ஒருவர் கூறினார். இது வாய் தவறி சொன்ன வார்த்தைகள் அல்ல. இப்படி பேசி அதன் விளைவுகளை சோதிப்பதற்காக செய்யப்பட்டுள்ளது. பா.ஜ. வெற்றி பெற்றால், மக்களின் சொத்துக்களை பறிப்பதற்காக அவர்கள் அரசியலமைப்பை மாற்றுவார்கள்.

ஜி.எஸ்.டி.யால் யார் பலன் அடைந்தார்கள்? கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இன்று வேலையில்லா திண்டாட்டம் நிலவுகிறது. நாட்டின் மொத்த செல்வமும் ஒரு சதவீத மக்களிடம் உள்ளது. 70 கோடி மக்களின் சொத்துக்கு சமமான சொத்து வெறும் 22 பேரிடம் உள்ளது. இப்படி, பிரதமர் மோடி தனக்கு வேண்டப்பட்ட மூன்று நான்கு கோடீஸ்வரர்களுடன் சேர்ந்து மேட்ச்பிக்சிங் செய்து, ஏழைகளிடம் இருந்து அரசியலமைப்பை பறிக்கப் பார்க்கிறார்.

அரசியலமைப்பு என்பது மக்களின் குரல், அது முடிவடையும் நாளில் இந்த நாடு அழிந்து விடும். அரசியலமைப்பு இல்லையென்றால் ஏழைகளின் உரிமைகளும், இடஒதுக்கீடும் போய்விடும். மேட்ச்பிக்சிங் மூலம் பா.ஜ. தேர்தலில் வெற்றி பெற்று அரசியல் சட்டத்தை மாற்ற விரும்புகிறது. அப்போது நாடு காப்பாற்றப்படாது. எங்கும் தீப்பிடித்து எரியும். எனவே இந்த தேர்தல் வெறும் வாக்குகள் சம்மந்தப்பட்ட சாதாரண தேர்தல் அல்ல. நாட்டையும், அரசியலமைப்பையும் காப்பாற்ற வேண்டிய தேர்தல்.

இவ்வாறு ராகுல் காந்தி பேசினார்.

# நரேந்திர மோடி மிரட்டி, பணம் பறிக்கும் கும்பலை வழிநடத்துகிறார்!

## காங்கிரஸ் கட்சி விமர்சனம்!

*புதுடெல்லி, ஏப். 2 - எக்ஸ் சமூக வலை தளத்தில் வேகமாக பரவி வரும் Click Here டிரெண்டிங் என்றால் என்ன?. நடப்பு நாடாளுமன்றத் தேர்தலுக்கும் அதற்கும் என்ன தொடர்பு? என்பதை பாப்போம். சமூக வலைதளங்களில் அவ்வப்போது ஏதாவது ஒரு சுவாரசியமான கருத்து அல்லது நகைச்சுவை துணுக்கு டிரெண்டாவது வழக்கம். அந்த வகையில் கடந்த சில நாட்களாக எக்ஸ் வலைதளத்தில் இளைய தலைமுறையினரால் டிரெண்ட் செய்யப்படுவது தான் Click Here அதாவது எக்ஸ் வலைதளத்தில் Click Here என்றும், இடது கீழ்புறத்தை குறிக்கும் ஒரு அம்பு குறியும் போடப்பட்ட ஒரு புகைப் படம் பரவலாக பகிரப் பட்டு வருகிறது.*

*இதன் நிஜ பெயர் Alt பட்டன் என்றும் பார்வை மாற்றுத்திறனாளிகளும் எக்ஸ் தளத்தை சிரமமின்றி பயன்படுத்தும் வகையில் செய்திகளை ஒளி வடிவத்திற்கு மாற்றி கொள்ளும் வசதி தான் இது என்றும் எக்ஸ் வலைத்தள நிர்வாகம் அறிவித்திருந்தது. இந்த வசதியானது கடந்த 2016ம் ஆண்டே நடைமுறைக்கு வந்துவிட்டாலும் அவ்வப்போதைய அனுபவங்களின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டு தற்போது Alt பட்டன் மூலம் 420 எழுத்துக்கள் வரை பதிவு செய்ய இயலும். தற்போது இந்தியாவில் மக்களவை தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில் இந்த Click Here டிரெண்டையும் தங்களுக்கு சாதகமாக மாற்றி கொண்டுள்ளன முக்கிய அரசியல் கட்சிகள்.*

*இந்த டிரெண்டில் முதலில் இணைந்த பாரதிய ஜனதா கட்சி, ஒரு Click Here படத்தை பகிர்ந்து அதன் Alt பட்டனில் மீண்டும் மோடி அரசு என குறிப்பிட்டிருந்தது. இதை அடுத்து பாஜகவை தேர்தல் களத்தில் எதிர்கொள்வதை போலவே எக்ஸ் களத்திலும் எதிர்கொண்டது காங்கிரஸ். உடனடியாக ஒரு Click Here படத்தை பகிர்ந்த காங்கிரஸ் அதன் Alt பட்டனில் நரேந்திர மோடி மிரட்டிப் பணம் பறிக்கும் கும்பலை வழிநடத்துகிறார். அது உங்களுக்கே தெரியும்! என்று குறிப்பிட்டிருந்தது.*

*நாடு முழுவதும் காங்கிரசின் இந்த Click Here படம் பரவலாக பகிரப்பட, ஆம் ஆத்மி கட்சியும் இந்த டிரெண்டிங்கில் இணைந்தது.*

*நேற்று முன்தினம் 'இந்தியா' கூட்டணியின் பிரமாண்ட பொதுக்கூட்ட வேலையில் இருந்த அக்கட்சி பகிர்ந்த Click Here Alt பட்டனில் நாட்டை காப்பாற்ற மார்ச் 31 அன்று ராம்லீலா மைதானத்திற்கு வாருங்கள் என்று குறிப்பிட்டது. திரை பிரபலங்கள், செய்தி ஊடகங்கள், மீம் கிரியேட்டர்கள் போன்றவர்களையும் இந்த Click Here டிரெண்ட் விட்டு வைக்க வில்லை. இந்த டிரெண்ட் போகும் வேகத்தை பார்த்தால் இதன் சுவாரசியம் இப்போதைக்கு தீராது போல் இருக்கிறது.*